இந்திய உச்ச நீதிமன்றம்

2020 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர்கள் திரு. உதய் உமேஷ் லலித், திரு. வினீத் சரண் மற்றும் திரு. எஸ். ரவீந்த்ர பட்

குற்றவியல் மேல்முறையீட்டு எண் 659/2020

செல்வி 'A'

எதிர்

உத்தரபிரதேச அரசு மற்றும் ஒருவர்

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 – பிரிவுகள் 164, 173, 190, 207, 208 – பிரிவு 164-ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது – குற்றம் சாட்டப்பட்டவருக்கு நகல்- பாலியல் சுரண்டல் / துன்புறுத்தல் வழக்கு –தாமாக முன்வந்து உச்ச நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட வழக்கு – SIT நிறுவ உத்தரவு – பிரிவு 164-ன் கீழ் மேல்முறையீட்டாளர் / பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலம் – 2 ம் எதிர் மனுதாரரால் சான்றிட்ட நகல் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது. – உத்தரவு எதிர்க்கப்பட்டது – உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது – கூறப்பட்ட தீர்வுக்கு முன் இந்த சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கலாம், பிரிவு 164-ன் கீழ் மேல்முறையீட்டாளரின் வாக்குமூல நகல் 2 ம் எதிர்மனுதாரருக்கு

வழங்கப்பட்டுவிட்டது – முடிவு: பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூலத்தின் நகலைப் பெறும் உரிமை ஆனது விசாரணைக்கு பிறகு, பிரிவுகள் 207 & 208 ஆகியன குறித்து ஆலோசனை செய்த பின்பே கிடைக்குமே ஒழிய, அதற்கு முன் அல்ல – இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த போது வெறும் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டது என்பதால் மட்டும், 2 ம் எதிர் மனுதாரர் பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூலத்தின் நகலை பெற உரிமை கோர முடியாது – குறிப்பாக பாலியல் சுரண்டல்/ துன்புறுத்தல், குறிப்பாக பாலியல் குறித்த விவகாரங்களில், கர்நாடக அரசு நொனவினகெர் காவல் எதிர் ஷிவான்னா என்கிற தர்காரி ஷிவான்னா என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கொடுத்த உத்தரவை பரிசீலிக்க உயர்நீதிமன்றம் தவறியுள்ளது [2014] 5 SCR 812, இத்தகைய சங்கதிகளில் மிகுந்த இரகசியமானது கடைபிடிக்கப்பட வேண்டும் – உயர்நீதிமன்றத்தின் உத்தரவானது நீக்கறவு செய்யப்படுகிறது – தண்டனைச் சட்டம், 1860 – பிரிவுகள் 376C, 354D, 342, 506.

இந்நீதிமன்றத்தில் மேல் முறையீடு அனுமதிக்கப்படுகையில்,

முடிவு: பிரிவு 173-ன் கீழ் அறிக்கை / குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்படும் வரை, பிரிவு 164-ன் கீழ் பாதிக்கப்பட்டவரிடம் பெற்ற வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எதையும் யாருடனும் பகிர்ந்துகொள்ளக் கூடாது என்று குறிப்பிட்ட உத்தரவுடன் நீதித்துறை நடுவர் சம்மந்தப்பட்ட விசாரணை அதிகாரியிடம் பிரிவு 164-ன் கீழ் பெற்ற வாக்குமூலத்தை ஒப்படைக்கவேண்டும் என்று சிவன்னா வழக்கில் இந்நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973-ல் சம்மந்தப்பட்ட கூற்றின்படி: பிரிவு 173-ன் கீழ் தேவையான தகவல்களுடன், விசாரணை முடிவுற்றப்

பிறகு பிரிவு 173-ன் சரியான அறிக்கையானது காவல்துறையால் தாக்கல் செய்யப்படவேண்டும், பிரிவு 190-ன் படி சம்மந்தப்பட்ட நடுவர், காவல் அறிக்கையின் அடிப்படையில் மற்ற எந்த குற்றங்களுடன் சேர்த்து வேண்டுமானாலும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம். பிரிவு 190 ன் படி எந்த நிலையிலும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, வழக்கில் குறிப்பிட்ட கோணத்தில் / தீர்வு காண வேண்டிய பிரச்சனைக்காக (சங்கதிக்காக) (issues) கூடுதல் விசாரணை செய்யுமாறு மேற்கொள்ளுமாறு தேவையான உத்தரவு வழங்கலாம். வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, நீதிமுறை கட்டளை வழங்கப்பட்டால் தான், பிரிவு 207 & 208 -ல் குறிப்பிட்ட ஆவணங்களின் நகல்களை பெறலாம். எதிரிக்கு நகல் வழங்கும் குறிப்பிட்ட வழக்கின் நிலையை முன்னதாகவே எடுத்துக்கொள்ளும் வரை, குற்றச்சாட்டு தாக்கல் செய்தல் என்பது மட்டும் 164-ன் கீழான வாக்குமூலம் உள்பட சம்மந்தப்பட்ட எந்த ஆவணத்தின் நகலை எதிரிக்கு நகல் பெறும் உரிமையை வழங்கிவிடாது. இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் உத்தரவினைப் பிறப்பிக்கும் போது, குற்றசாட்டு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்ற அடிப்படையில் மட்டும், 2 ம் எதிர் மேல்முறையீட்டாளர் பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூல நகலை பெற தகுதிவாய்ந்தவர் ஆகமாட்டார். ஷிவான்னா (2014) 8 SCC 913 வழக்கில் இந்நீதிமன்றம் உத்தரவு வழங்கும் முன், 2012-ல் உயர்நீதிமன்ற அமர்வு நீதிமன்ற முடிவில் நம்பிக்கை வைத்ததாக காரணம் குறிப்பிட்டது முழுமையாக தவறானதாகும். இந்நீதிமன்ற உத்தரவின் தர்க்க நீட்டிப்பாக, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது, தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை, பிரிவு 164-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூல

நகலைப் பெற, எந்த நபருக்கும் உரிமை இல்லை. 207 மற்றும் 208 ம் பிரிவுகளின் நடைமுறைகள் மற்றும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டப் பின்பே, வாக்குமூலத்தின் நகலைப் பெறும் உரிமையானது எழுமே ஒழிய, அதற்கு முன்பு அல்ல, ஆகையால், 2 ம் எதிர் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பமானது, கூடுதல் அமர்வு நீதிபதியால் சரியாக நிராகரிக்கப்பட்டுள்ளது, மற்றும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் உயர்நீதிமன்ற தலையீடு அவசியமற்றது. குறிப்பாக எதிரிகளுக்கு எதிராக பாலியல் குற்றம் (sexual exploitation) சுமத்தப்பட்டுள்ள வழக்குகளில் இந்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளை பரிசீலனை செய்யவதில் உயர்நீதிமன்றம் முழுமையாக தவறு செய்துள்ளது. அத்தகைய வழக்குகளின் விவரங்கள் மிகு முக்கியமான ரகசியமாக காக்கப்பட வேண்டியது. அந்த வகையில் உயர்நீதிமன்றம் முழுமையாக தோல்வியடைந்துள்ளது. பிரிவு 164 -ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூல நகல் எதிரிக்கு வழங்கப்பட்டு இருந்தாலும் கூட, உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தள்ளி வைக்கப்படுகிறது. பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூலத்தின் நகல்கள் எந்த சூழ்நிலையிலும், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நீதிமன்றத்தால் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை வழங்கப்படக் கூடாது. [Paras 14-19][523-C-H; 524-A-E]

சார்ந்த வழக்கு : S கர்நாடக மாநில அரசு சார்பாக நோனாவினைகெரே காவல் எதிர் ஷிவன்னா என்கிற தர்க்காரி ஷிவன்னா (2014) 8 SCC 913 : [2014] 5 SCR 812

குறிப்புற்ற வழக்கு : பகவந் சிங் எதிர் காவல் ஆணையர் (1985) 2 SCC 537 : [1985] 3 SCR 942

குறிப்புற்ற வழக்கு : ராஜு ஜான்கி யாதவ் எதிர் உத்தர பிரதேச மாநில அரசு மற்றும் பலர் (2012) 6 All LJ 486

<u>பார்வையுற்ற வழக்குகள்</u>

சார்ந்த வழக்கு : [2014] 5 SCR 812 : பத்தி 8

குறிப்புற்ற வழக்கு : [1985] 3 SCR 942 : பத்தி 15

குற்றவியல் மேற்முறையீட்டு அதிகாரவரம்பு:

அலகாபாத் உயர்நீதிமன்ற குற்றவியல் பல்வகை விண்ணப்ப எண் 39538/2019-ல் 07/11/2019 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிற்கு எதிரான

குற்றவியல் மேல்முறையீட்டு எண் 659 / 2020.

தரப்பினர்களுக்காக தோன்றிய வழக்கறிஞர்கள் விக்ரம்ஜித் பானர்ஜீ, கூடுதல் தலைமை வழக்கறிஞர் , சித்தாத் சீம், சத்ய மித்ரா, செல்வி கார்மியா பிரசாத், வஷவி விரேந்திரா, கௌரௌவ் அகர்வால் மற்றும் ராஜ் சிங் ரானா.

நீதியரசர் உதய் உமேஷ் லலித் என்பவரால் வழங்கப்பட்டத் தீர்ப்பு.

1. அனுமதி அளிக்கப்பட்டது.

2. குற்றவியல் பல்வகை விண்ணப்ப எண் 39538/2019-ல் 07/11/2019 தேதியிட்ட உயர்நீதிமன்ற (அலகாபாத் உயர்நீதிமன்றம்) உத்தரவைத் தொடர்ந்து இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

3. மேல்முறையீட்டாளரையும் மற்றும் வேறு பல பெண்களையும், 2ம் எதிர் மேல்முறையீட்டாளரும் வேறு சிலரும் பாலியல் சுரண்டல் / துன்புறுத்தல் செய்த காணொளியை மேல்முறையீட்டாளரின் முகநூல் கணக்கில் தான் பார்த்ததாகவும், மேல்முறையீட்டாளரை தொடர்பு கொள்ளமுடியவில்லை என்றும், மேல்முறையீட்டாளருக்கு ஏதோ விபரீதம் நிகழ்வதாகவும், உடனடியாக இந்த விவகாரத்தில் நடவடிக்கை வேண்டும் என்றும், ஷாஜஹான்பூர் மாவட்டம், கோத்வாலி காவல் நிலையத்தில் 25.08.2019 அன்று மேல்முறையீட்டாளரின் தந்தை புகார் கொடுத்துள்ளார்.

4. அதன் பிறகு 2 ம் எதிர் மேல்முறையீட்டாளர் நடத்தி வரும் ஆசிரமத்தின் சட்ட பணிகளை மேற்கொண்டு வரும் திரு.ஓம் சிங் என்ற வழக்கறிஞர் ஒருவர், ஐந்து கோடி ரூபாயை கொடுக்காவிட்டால் 2ம் எதிர் மேல்முறையீட்டாளரின் பெயருக்கு சமுதாயத்தில் களங்கம் ஏற்படும் என்றும் அடையாளம் தெரியாத நபர் மிரட்டியதாக புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகார் பேரில் உடனடியாக முதல் தகவல் அறிக்கை எண் 442/2019 பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. மேல்முறையீட்டாளரின் தந்தை கொடுத்த புகாரானது இரண்டு நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை எண் 445/2019 கடத்தல் மற்றும் பாலியல் தொந்தரவு செய்த குற்றங்களுக்காக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 506 மற்றும் 364 ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6. முகநூல் காணொளி மிக வேகமாக பகிரப்பட்டு வந்ததைத் தொடர்ந்து சில வழக்கறிஞர்கள் கொடுத்த கடித்தத்தின் அடிப்படையில், இந்நீதிமன்றம் தாமாக முன்

வந்து குற்றவியல் நீதிப்பேராணை மனு எண்.2/2019 பதிவு செய்தது. 30/8/2019 அன்று மேல்முறையீட்டாளர் ராஜஸ்தான் மாநிலம், டௌசா மாநிலத்தில் காணப்பட்டதாக தகவல் கிடைத்தது, 30/8/2019 அன்று மேல்முறையீட்டாளர் தனக்கு உத்திரப்பிரதேசம் செல்ல விருப்பமில்லை என்றும், தனது பெற்றோரை டெல்லியில் சந்திப்பதாக கூறியதை பதிவு செய்து கொண்ட இந்நீதிமன்றம், அதனால் சில உத்தரவுகளை வழங்கியது.

7. 2/9/2019 தேதியிட்ட அதன் உத்தரவில்: இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்வது:

> "செல்வி ஏ என்பவர் கூறும் இடர்பாடுகள் மற்றும் அவரது தந்தையின் அனுமானங்களின் அடிப்படையில் நாங்கள் எங்கள் கருத்து எதையும் கூறவில்லை, சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைகளின் படி நடந்த நிகழ்வு முழுமையாவும் சரியாகவும் கூறப்படவேண்டும் என்பதை மட்டுமே குறியிட்டு சொல்ல விரும்புகிறோம்
>
> மேற்கண்டவை படி,ஆய்வாளர் பதவியில் காவல் கண்காணிப்பாளரை உதவியாளராகக் கொண்ட, காவல்துறை தலைவர் தலைமையிலான சிறப்பு குழுவை உத்திரப்பிரதேச மாநில தலைமை செயலர் உருவாக்க வேண்டும் என்று நாங்கள் உத்தரவு வழங்குவதுடன், காவல் துறை அதிகாரிகளை மற்றொரு குழு செல்வி ஏ தெரிவித்த சம்பவங்களையும் அவரது பெற்றோர்கள் கூறிய சம்பவங்களையும் விசாரணை செய்யவேண்டும்

இந்நிலையில், கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு.விக்ரம்ஜித் பானர்ஜீ மற்றும் கூடுதல் தலைமை வழக்கறிஞர் செல்வி ஐஸ்வர்யா பாட்டி, செல்வி ஏ=வின் தந்தை கொடுத்த புகாரின் அடிப்படையில் நிறுவன நிர்வாகத்திற்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 364 மற்றும் 506 இன் கீழ் 27/8/2019 தேதியிட்ட 445 எண் கொண்ட முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தனர். மேலும் 25/8/2019 தேதியிட்ட எதிர் முதல் தகவல் அறிக்கை எண் 442 பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு.விக்ரம்ஜித் பானர்ஜி சமர்பித்துள்ளார்.

விசாரணைக்குழு இரு முதல் தகவல் அறிக்கையினையும் குறிப்பெடுத்துக்கொண்டு, சட்டப்படி இரண்டையும் விசாரணை செய்ய வேண்டும் மற்றும் அதன் அறிக்கை நிலையை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும். வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இது சம்மந்தப்பட்ட விசாரணையை கண்காணிக்க ஒரு அமர்வை நியமிக்குமாறு அலகாபாத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை வேண்டுகிறோம்.

பெண்ணின் தந்தை அவர்களது பாதுகாப்பு குறித்து அச்சம் தெரிவித்தபடியால், பெண்ணின் பெற்றோர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கான பாதுகாப்பை வழங்குமாறு சம்மந்தப்பட்ட ஷாஜாஹான்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு உத்தரவு வழங்கும்படி, உத்திரப்பிரதேச மாநில தலைமைச் செயலருக்கு நாங்கள் உத்தரவு வழங்குகிறோம். அதுமட்டுமின்றி

செல்வி ஏ-வின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறித்து உயர்நீதிமன்றம் பகுப்பாய்வு செய்து தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் வேண்டுகிறோம்."

8. தொடர்சியாக, சிறப்பு விசாரணைக் குழு (SIT) நியமிக்கப்பட்டது, 16/9/2019 அன்று குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 164-ன் கீழ் நீதித்துறை நடுவரால் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பிரிவு 164-ன் கீழான வாக்குமூலம் பதிவு செய்யும்போது சில தடங்கல் / இடையூறு ஏற்பட்டதாக மேல்முறையீட்டாளர் 17.09.2019 விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளார், 17.09.2019 அன்றைய தினமே, எதிர் மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளரிடம் இருந்து பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூலத்தின் சான்றிட்ட நகலை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளார். அந்த விண்ணப்பமானது ஷாஜஹான்பூர் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டு 19/9/2019 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது. கர்நாடக அரசு நொனவினகெர் காவல் எதிர் சிவன்னா என்கிற தர்காரி சிவன்னா என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கூறியதாவது :

"..... பிரிவு 164-ன் கீழ் பெற்ற வாக்குமூல நகலை இந்த துவக்க நிலையிலேயே கொடுத்துவிட்டால், வழக்கின் முக்கிய விபரம் மட்டுமின்றி விசாரணையில் சம்மந்தப்பட்ட மிக முக்கிய சாட்சி (களின்) விபரம் கூட கசிந்துவிடக்கூடும், பாதிக்கப்பட்டவரின் உடல் நிலை மற்றும் பாதுகாப்பு மட்டுமின்றி, அனைத்து முக்கிய சாட்சிகளுக்கும் ஆபத்தில் இருப்பார்கள். பாதிக்கப்பட்ட / எந்த சம்மந்தப்பட்ட நபர் (கள்) யாரும் விசாரணையை

சாதகமாக்கிக்கொள்ள கிடைக்கும் வாய்ப்புகளை கை நழுவ விடமாட்டார்கள் மற்றும் பிரிவு 173-ன் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் முக்கிய சாட்சிகளையும் முன் தங்கள் சார்பாக்கிக்கொள்ள செல்வாக்கைப் பயன்படுத்த முயல்வர். கண்டிப்பாக அவை அனைத்தும் குற்றம்சாடும் தரப்பிற்கு பாதகமானதாகும்.

எது எவ்வாறாயினும், விசாரணை முடிவுற்ற பிறகு, பிரிவு 173-ன் கீழ் அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 164-ன் கீழ் பெற்ற வாக்குமூல நகல் மற்றும் தொடர்புடைய மற்ற ஆவணங்களை சம்மந்தப்பட்ட நபர் கேட்க முடியும்.

மேற்கண்டவைப் படி, கற்றறிந்த விண்ணப்பதாரரின் வழக்கறிஞர் சுவாமி சின்மயானந்த் சரஸ்வதி, 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூல நகல் வேண்டி தாக்கல் செய்த விண்ணப்பத்தை மேற்கண்ட வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்படுகிறது."

9. 2 ம் எதிர் மேல்முறையீட்டாளர் 20.09.2019 அன்று கைது செய்யப்பட்டுள்ளார் மற்றும் அவரது பிணை கோரிய விண்ணப்பம் ஷாஜஹான்பூர் தலைமை நீதித்துறை நடுவரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. 19/09/2019 தேதியிட்ட உத்தரவை எதிர்த்து 2 ம் எதிர் மேல்முறையீட்டாளர் 22.10.2019 அன்று குற்றவியல் பல்வகை விண்ணப்ப எண்.39538 of 2019 உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை எண். 442 of 2019 மற்றும் முதல் தகவல் அறிக்கை எண். 445 of 2019 களில் SIT ஆனது 05.11.2019 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது. முதல் தகவல்

அறிக்கை எண். 445 of 2019 -ல் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையின் படி 2 ம் எதிர் மேல்முறையீட்டாளர் 376C, 354D, 342, 506 ஆகிய இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் படி தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளார்.

10. 07.11.2019 அன்று குற்றவியல் பல்வகை விண்ணப்ப எண். 39538 of 2019 ஆனது உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ராஜு ஜானகி யாதவ் எதிர் உத்திரப்பிரதேச மாநிலம் மற்றும் மற்றவர் [குற்றவியல் பல்வகை நீதிப்பேராணை மனு எண் 3567 / 2012, (2012) 6 All LJ 486, தீர்வு நாள் 08.05.2012]-ல் உயர்நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்வின் கீழ்கண்ட கருத்துகளானது சார்ந்துள்ளது:-

> "இந்நிபந்தனைகளின் படி, பிரிவு 164 கு.ந.மு.ச. படி பெறப்பட்ட வாக்குமூல நகலை பெற சம்மந்தப்பட்ட எந்த நபரேனும் விண்ணப்பம் செய்து, விதிகளின் படி அவர் அதற்கான ஏற்புடைய கட்டணத்தை செலுத்த தயாராக இருக்கும்பட்சத்தில், அதை வழங்க மறுக்க முடியாது, என்று நாங்கள் கருதுகிறோம்....."

கீழ்கண்ட கற்றறிந்த வழக்கறிஞரின் கூற்றையும் உயர்நீதிமன்றம் பதிவு செய்துள்ளது:-

"கற்றறிந்த A.G.A. இவ்வழக்கை ஏற்று நடத்த தேவையான அறிவுறுத்தல்களை பெற கால அவகாசம் வேண்டினார். தற்போது அவருக்கு தேவையான அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெற்றுவிட்டன. விண்ணப்பதாரருக்கு / எதிரிக்கு பிரிவு 164 கு.வி.மு.ச.படி பெறப்பட்ட வாக்குமூல

நகலை வழங்கியிருக்க வேண்டும் என்று கூறினார். விண்ணப்பதாரருக்கு / எதிரிக்கு பிரிவு 164 கு.வி.மு.ச. படி பெறப்பட்ட வாக்குமூல நகலை வழங்க மறுத்து எதிர்ப்புக்குள்ளான தீர்வை விசாரணை நீதிமன்றம் தவறாக வழங்கியது."

ஷிவன்னா (2014) 8 SCC 913 வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிய தீர்வு இதற்கு பொருந்தாது (would not get attracted) என்று முடிவு செய்ததற்கான காரணம் பின்வருமாறு:-

"அந்த உத்தரவுகள் காவல் துறைக்கு வழங்கப்பட்டதே ஒழிய, நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது அல்ல என்று விண்ணப்பதாரரின் வழக்கறிஞர் வாதிட்டுள்ளார். அந்த வாதத்தை நான் ஒப்புக்கொண்டாலும், இந்த நீதிமன்றத்தின் அமர்வு ஆனது (மேற்கண்ட) ராஜு வழக்கில் சரியான சட்டம் வகுக்கப்பட்டுள்ளது (laid down) என்று கருதுகிறேன், அதன் படி விண்ணப்பதாரருக்கு பிரிவு 164 கு.வி.மு.ச. படி பெறப்பட்ட வாக்குமூலத்தின் சான்றிட்ட நகலை, சாதாரண கட்டணம் வசூல் செய்யப்பட்ட (subject to payment of usual charges) பின் வழங்க விசாரணை நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது. அதன் படி, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுவதுடன், விண்ணப்பதாரருக்கு பிரிவு 164 கு.வி.மு.ச. படி பெறப்பட்ட வாக்குமூலத்தின் சான்றிட்ட நகலை, சாதாரண கட்டணம் வசூல் செய்யப்பட்ட (subject to payment of usual charges) பின் வழங்க விசாரணை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்று உத்தரவு வழங்கப்படுகிறது."

11. அன்று 13.11.2019 S.L.P. ஐ தாக்கல் செய்து உயர்நீதிமன்றத்தின் முடிவிற்கு எதிராக மேல்முறையீட்டாளர் முன், அவரிடம் பிரிவு 164 கு.வி.மு.ச. படி பெறப்பட்ட வாக்குமூலத்தின் நகல் 2 ம் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுவிட்டது.

12. இம்மேல்முறையீடு விசாரணைக்கு வருகையில், மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் இந்த விஷயத்தில் "குறிப்பேதுமில்லை" என்று தெரிவித்ததுடன் நீதிமன்றத்தில் ஆஜராகமல் இருக்க வேண்டினார். வழக்கின் வேண்டுதல் ஆனது சட்டம் குறித்த கேள்வியைத் தொடர்ந்து எழுந்தது, நாங்கள் வேண்டுதலை நிராகரித்ததுடன், தரப்பினர்களின் கற்றறிந்த வழக்கறிஞர்ளை கேட்க துவங்கினோம்.

13. ஷிவான்னா (2014) 8 SCC 913 வழக்கில் இந்த நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகள் பின்வருமாறு:-

> "2. விரைவு நீதிமன்றங்கள் ஆனது வன்புணர்ச்சி குற்றச்சாட்டு சம்மந்தப்பட்ட வழக்குகளை விசாரணை நிலையிலேயே விரைந்து முடித்து வைப்பதற்காகவே உருவாக்கப்பட்டது என்பதில் ஐயம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளோம், இருப்பினும் இது போன்ற வழக்குகளை விரைந்து முடிக்க விரைவு நீதிமனறங்கள் இருந்தாலும், 376-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் வண்புணர்ச்சி கூட்டு பலாத்காரம் போன்ற வழக்குகளில் விரைவு நடைமுறைகள் நம் வசமில்லை, அதன் விளைவாக இதுபோன்ற மிகக் கொடிய குற்றங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுகிறது என்பதை அறியும் போது நாங்கள் கலக்கத்துள்ளாவதுடன் வேதனையடைகிறோம்.

3. கு.வி..மு.ச.-ல் விரைவு நீதிமன்றங்களில் விரைவு நடைமுறையை அறிமுகம் செய்ய கடுமையான திருத்தம் கொண்டு வர அழுத்தம் தேவை என்று நாங்கள் உணருகின்ற பொழுது, குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் 1973-ல் கற்பழிப்பு சம்மந்தப்பட்ட குற்றச்சாட்டுடைய வழக்குகளில் விசாரணைக்குள்ளான சம்மந்தப்பட்ட சாட்சிகள் அனைவருடைய வாக்குமூலத்தையும் பதிவு செய்ய நேரடியாக இயன்றவரை பெண் நீதித்துறை நடுவர் முன் ஆஜர்ப்படுத்தி, வாக்குமூலத்தை பத்திரமாக மேலுரைக்கு சீல் செய்து வைத்து, பிறகு அதையே விசாரணை நிலையில் ஆஜர்படுத்தி, அதையே ஆதாரமாக கருதி, சட்டப்படி பதிவு செய்து, பின்னர் அதனை குறுக்குவிசாரணை வாயிலாக சோதனைக்குள்ளாக்கலாம் என்று தேவையான திருத்தங்களை கொண்டு வர, ஏன் முன்முயற்சி மற்றும் நேர்மையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்று இந்திய ஒன்றியத்திற்கு அறிவிப்பு வழங்கி அதன் பதிலை வழங்குமாறு அறிவுருத்த ஆலோசிக்கின்றோம். பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலத்தை பிரிவு 161-ன் கீழ் காவல்துறை பதிவு செய்வதை தவிர்த்து, 164-ன் கீழ் இயன்றவரை பெண் நீதித்துறை நடுவரால் பதிவு செய்து சீலிட்ட மேலுரைக்குள் வைக்க வேண்டும் மற்றும் விசாரணையின் போது, அதையே ஆதாரமாக கருதி, குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தலாம்.

"கீழ்கண்ட விளைவுகளுக்காக இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகள்:- "

10.1. கற்பழிப்பு குற்ற நிகழ்வு குறித்த தகவல் கிடைக்கப்பெற்றால், ஏதேனும் மாநகர / இயன்றவரை பெண் நீதித்துறை நடுவர் முன் கு.வி.மு.ச. 164-ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய பாதிக்கப்பட்ட நபரை ஆஜர் செய்ய விசாரணை அதிகாரி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கு.வி.மு.ச. 173-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் வரை, கு.வி.மு.ச. 164-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யாருடனும் பகிரக் கூடாது என்ற குறிப்பிட்ட உத்தரவுடன், கு.வி..மு.ச. 164 வாக்குமூல நகலை விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

10.2. பாதிக்கப்பட்ட நபரை அருகில் உள்ள மாநகர பெண் / நீதித்துறை பெண் நடுவர் முன், விசாரணை அதிகாரி ஆஜர் செய்ய வேண்டும்.

10.3. கற்பழிப்பு குற்ற நிகழ்வு குறித்த தகவல் கிடைக்கப்பெற்ற நாள், நேரம் ஆகியவற்றை விசாரணை அதிகாரி பதிவு செய்வதுடன், மேற்கண்டவாறு பாதிக்கப்பட்ட நபரை மாநகர நடுவர் / இயன்றவரை நீதித்துறை பெண் நடுவர் முன் ஆஜர் செய்த நாள் மற்றும் நேரத்தையும் பதிவு செய்ய வேண்டும்.

10.4. பாதிக்கப்பட்டவரை 24 மணி நேரத்திற்குள் நடுவர் முன் ஆஜர் செய்ய தவறியிருந்தால், அதற்கான காரணத்தை விசாரணை அதிகாரி வழக்கு கோப்பில் பதிவு செய்து, அதன் நகலை நடுவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

10.5. பாதிக்கப்பட நபரின் மருத்துவ பரிசோதனை: 25/2005 சட்டத்தின் படி புகுத்தப்பட்ட குவிமுச பிரிவு 164-A ஆனது, கற்பழிப்பால் பாதிக்கப்பட்ட நபரை

உடனடி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கடமையை விசாரணை அதிகாரி மீது சுமத்தியுள்ளது. கு.வி.மு.ச. 164-ன் கீழ் வாக்குமூலத்தை பதிவு செய்யும் நடுவரிடம் மருத்துவப் பரிசோதனை அறிக்கை நகல் வழங்கப்பட வேண்டும்."

14. இந்நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் படி, கு.வி.மு.ச. 173-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் வரை, கு.வி.மு.ச. 164-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட நபரின் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யாருடனும் பகிரக் கூடாது என்று சம்மந்தப்பட்ட நீதித்துறை நடுவர் உத்தரவு வழங்கி, கு.வி.மு.ச. 164-ன் கீழான வாக்குமூல நகலை விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

15. பிரிவு 173-ன் படி தேவையான தகவல்களுடன், பிரிவு 173-ன் படியான சரியான அறிக்கை ஆனது காவல் துறையால் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதே, சம்மந்தப்பட்ட சட்டக் கூறுகளின் நோக்கமாகும். இந்நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட பல முடிவுகளின் அடிப்படையில், 190-ல் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, காவல் துறை அறிக்கையில் கண்ட எந்த குற்றத்திற்கான விசாரணையையும், பிரிவு 190-ன் அடிப்படையில் சம்மந்தப்பட்ட நீதித்துறை நடுவர் மேற்கொள்ளலாம், **பகவந்த் சிங் எதிர் காவல்துறை ஆணையாளர்** [(1985) 2 SCC 537 para4] -ன் குறிப்பிடதக்க முடிவு, குறிப்பிட்ட கோண விசாரணை/ தகவல்-க்காக அவசியம் என கருதும் நேர்வில், கூடுதல் விசாரணை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட நடுவர் உத்தரவிடலாம். விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பிறகு மட்டுமே, பிரிவுகள் 207 & 208-ன் படி, அப்பிரிவுகளில் குறிப்பிட்ட ஆவண நகல்களை பெற எதிரிக்கு உரிமையுள்ளது என்று

அறிவிப்பு வழங்கியதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது என்பது தானாகவே, 164-ன் கீழான வாக்குமூலம் உட்பட சம்மந்தப்பட்ட எந்த ஆவண நகல் பெறும் உரிமை ஆனது, சம்மந்தப்பட்ட நிலை எடுத்துக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படும்வரை, எதிரிக்கு கிடைக்கபெறாது.

16. இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் உத்தரவினைப் பிறப்பிக்கும் போது, குற்றசாட்டு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்ற அடிப்படையில் மட்டும், 2 ம் எதிர் மேல்முறையீட்டாளர் பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூல நகலை பெற தகுதிவாய்ந்தவர் ஆகமாட்டார்.

17. அதைத் தவிர, ஷிவான்னா (2014) 8 SCC 913 வழக்கில் இந்நீதிமன்றம் உத்தரவு வழங்கும் முன், 2012-ல் உயர்நீதிமன்ற அமர்வு நீதிமன்ற முடிவில் நம்பிக்கை வைத்ததாக காரணம் குறிப்பிட்டது முழுமையாக தவறானதாகும். இந்நீதிமன்ற உத்தரவின் தர்க்க நீட்டிப்பாக, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது, தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை, பிரிவு 164-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூல நகலைப் பெற, எந்த நபருக்கும் உரிமை இல்லை.

அந்த வாக்குமூலத்தின் நகலைப் பெறும் உரிமை ஆனது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டப் பிறகு எழுகிறது, பிரிவுகள் 207 & 208 ஆகியன குறித்து ஆலோசனை செய்த பின்பே கிடைக்குமே ஒழிய, அதற்கு முன் அல்ல. ஆகவே 2 ம் மேற்முறையீட்டாளரின் விண்ணப்பமானது, கூடுதல் அமர்வு நீதிபதியால் சரியாக நிரா க்கப்பட்டுள்ளது மற்றும் வெளியிடப்பட்ட அந்த உத்தரவு உயர்நீதிமன்றத்தின் தலையீட்டிற்கான அவசியமானது அல்ல.

18. எங்களது பார்வையின்படி, குறிப்பாக எதிரிகள் மீது பாலியல் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் விஷங்களில், இந்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளை பரிசீலனை செய்வதில் உயர்நீதிமன்றமானது முழுமையாக தவறு செய்துள்ளது, அத்தகைய விஷயங்களில் மிக முக்கியமாக இரகசியம் காக்கப்படவேண்டியது அவசியமாகும். எங்கள் பார்வையின்படி உயர்நீதிமன்றம் முழுமையாக தோல்வியடைந்துள்ளது.

19. எதிரிக்கு பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூல நகல் கொடுக்கப்பட்டு இருந்தாலும், நாங்கள் உயர்நீதிமன்ற உத்தரவை நீக்கறவு செய்ய வேண்டியது அவசியமாகும், மேலும் பிரிவு 164-ன் கீழ் பெறப்பட்ட வாக்குமூலத்தின் நகல்கள் எந்த சூழ்நிலையிலும், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நீதிமன்றத்தால் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை வழங்கப்படக் கூடாது என்று விதிமுறை வகுக்கிறோம்.

20. உயர்நீதிமன்ற அமர்வின் தீர்வில் வைக்கப்பட்ட நம்பிக்கையானது, ஷிவான்னா (2014) 8 SCC 913 வழக்கின் உத்தரவிற்க்கு கட்டுப்பட்டதாக, இந்த வழக்கு மேற்கண்டவாறு விளக்கிய வகையில் இருக்க வேண்டும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

21. ஆகவே இந்த மேல்முறையீடானது அனுமதிக்கப்படுகிறது

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."